# விருதுகள் – கேள்வியும் பதிலும்

**மாண்புமிகு முதல்வர் விருதுகள் வழங்கப்படுவதன் நோக்கம் என்ன?**

தொழில்முனைவோரின் தொழில் முயற்சிகளைப் பாராட்டி ஊக்கப்படுத்தும் விதமாக, தமிழ்நாடு அரசு சிறப்பாகச் செயல்படும் தொழில் நிறுவனங்களுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவில் விருதுகள் வழங்குகிறது. குறு நிறுவனங்களுக்குக் கடன் வழங்கும் நிதி நிறுவனங்களுக்கும் விருது வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு முதல்வர் விருதுகள் பெற விண்ணப்பிப்பதற்கான தகுதிகள் என்ன?**

உத்யோக் ஆதார் அல்லது உத்யம் பதிவுச் சான்றிதழ் பெற்று கடந்த மூன்றாண்டுகள் தொடர்ச்சியாக உற்பத்திச் செயல்பாட்டில் ஈடுபட்டு வரும் கு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் விருது பெற விண்ணப்பிக்கலாம்.

**மாண்புமிகு முதல்வர் விருதுகள் பெறுவோர்க்கு வழங்கப்படும் பரிசு மற்றும் தனிச் சிறப்புரிமைகள் எவை?**

விருது பெற்ற தொழில் முனைவோரின் நிறுவன ஊழியர்கள் விருதுச் சின்னம் பொறித்த அடையாள அட்டைகள் மற்றும் வில்லைகளை அணியலாம். தொழில் முனைவோர் விருதுச் சின்னத்தினை தமது நிறுவனப் பெயர்ப்பலகை, கடித அட்டை மற்றும் விளம்பரப் பதாகைகளில் பயன்படுத்த உரிமை உண்டு.

**மாண்புமிகு முதல்வர் விருதுகள் பெறத் தேர்வு செய்யும் முறை யாது?**

விண்ணபத்திலும் அதனோடிணைக்கப்பட்ட ஆவணங்களிலும் தரப்பட்ட விவரங்கள் மற்றும் தொடர்புடைய மாவட்டப் பொதுமேலாளரின் பரிந்துரை ஆகியவற்றாய்ச் சீர்தூக்கி, ஆணையரகத் தேர்வுக் குழு விண்ணப்பங்களை மதிப்பிட்டு மதிப்பெண் வழங்கும். அம்மதிப்பெண்கள் மீண்டும் கூராய்வு செய்யப்பட்டு மாநிலத் தேர்வுக்குழுவினால் அனைத்து வகையினங்களிலும் விருது பெறத் தகுதியானோர் பட்டியல் முடிவு செய்யப்படும்.